1975 மார்ச் 6]

(முற்பகல் 9-30)

திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, திராட்சைப் பழத்தில் இந்த அனபி-இ-சாயி என்ற பழம் ஆந்திராவிலிருந்து அதிகமாக வருவதாகக் கேள்விப் படுகிறோம். அது தமிழகத்தின் மார்க் கெட்டைக் குறைக்கிறது. எனவே, அதை நிறுத்துவதற்கு அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த அனபி-இ.சாயி அதிகமாகப் பயிரிடப்பட அதற்கு வேண்டிய உதவி களைச் செய்து வருவதாக அச்சிட்ட அறிக்கையில் இருக்கிறது.

மாவட்டங்களில் குடிசைப்பகுதி மாற்றுப் பணிகள்.

* 212 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் மாவட்டப் பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்றுப் பணிகளை வீட்டு வசதி வாரியம் ஏற்று நடத்தி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1977 ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகள் அனைத்தையும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தற்போது சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மட்டும் மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. வெளியூர்ப்பகுதி களில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணியை விரிவு படுத்த கூடுதலான பணியாளர்களும், அதிகச் செலவும் ஏற்படுமாத லால் சென்னை நகரிலுள்ள எல்லா குடிசைப் பகுதிகளையும் மாற்றி யமைத்த பின்னர், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணியை வெளியூர்ப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தலாம் என முடிவெடுக்கப் பட்டுள்ளது. அதுவரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே வெளி யூர்ப் பகுதிகளில் குடிசைப்பகுதி மாற்றியமைக்கும் பணியை தொடர்ந்து நடத்திவரும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கிராமப்பகுதிகளில் கிராம வீடுகள் திட்டத்தின் அடிப்படையில் 4,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த 4,000 ரூபாய் தற்சமயம் போதுமானது அல்ல. அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அது ஏற்கெனவே சென்ற ஆண்டு வரையில் 3,000 ரூபாய் வரையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு 4,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு அந்த வீடுகளைக் கட்டுபவர்களே ஆயிரம் ரூபாயைத் தங்கள் உழைப்பின் மூலமாகப் போட்டு கட்டிக் கொள்ள வேண்டுமென்பதுதான் அந்தத் திட்டத்தின் கொள்கை. சென்ற ஆண்டு 77 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கு மாறாக இந்த ஆண்டு கிராமங்களில் அதிக வீடுகள் கட்டப்பட வேண்டுமென்பதற்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், குடிசை மாற்று வாரியம் சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளை மட்டும் மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், மாவட்டங்களில் அந்தக் குடிசை மாற்று வாரியம் அந்த வேலைகளை எடுத்துக்கொண்டால் அதிக சிப்பந்திகளும், அதிகச் செலவும் ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் அதே வாதம் இந்த நகரத்திற்கும் பொருந்தாதா? ஒரு வீட்டு வசதி வாரியம் இருக்கும்பொழுது சென்னையிலே தனியாக குடிசை மாற்று வாரியம் எதற்காக இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, குடிசை மாற்றுத் திட்டம் என்பது, தனியாக சென்னை நகரத்திலே மட்டும் 1,202 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளைத் தனிப்பட்ட முறையில் எடுத்தால்தான் முடியும். சென்னையில் மற்ற வகுப்பினருக்கு, பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ள சமுதாயத்தில் பல்வேறுபட்ட வீடுகளைக் கட்டித் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே சென்னையிலே உள்ளது மிகப்பெரிய பிரச்சினை. மற்ற நகரங்களில் அப்படிப்பட்ட பிரச்சினை இல்லை. ஆகவே, சென்னை நகரத்தில் தனியாக அதற்கென்று வாரியம் வைத்தால்தான் வேலைகள் வேகமாக நடைபெறும் என்பதற்காக கலைஞர் அவர்கள் அந்த வாரியத்தை உருவாக்கினார்கள்.

1975 மார்ச் 6]

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, கோவையில் அம்மன் குளம், செங்காடு பகுதிகளில் இந்தக் குடிசை மாற்றும் பணி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, கோவை நகரத்தில் பல பகுதிகளில் வேலை நடந்திருக்கிறது. அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள மாவட்டத் தலைநகரங்களை எடுத்துக்கொண்டால் கோவை மாவட்டத்தில்தான் குடிசை மாற்றுப் பணிகள் அதிகம் நடைபெற்றிருக்கிறது. பல்வேறு இடங்களில் அந்த வேலைகள் நடந் திருக்கின்றன என்பதையும், அதற்கென்று தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான பதிலைத் தருவதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளை மாற்றி நாம் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக் கிறோம். ஆனால் புறநகர்ப் பகுதிகளாக இருக்கும் பல்லாவரம், அம்பத்தூர், திருவொற்றியூர் போன்ற செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இடங்களில் இருப்பவர்கள் கொத்தவால்சாவடி, துறைமுகம் இன்னும் மற்ற பகுதிகளுக்கும் வருகிறார்கள். எனவே மற்ற மாவட்டங்களில் எடுக்கும்போது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்பொழுது மாவட்டத் தலைநகரங்களில் குடிசைகளை மாற்றும் பணிதான் நடக்கிறது. அதுகூட இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் அப்படிப்பட்ட பணியில் ஈடுபடவில்லை. மாநிலத் தலைநகரங்களில்கூட அப்படிப்பட்ட பணிகள் மற்ற மாநிலங்களில் நடக்கவில்லை. நாம்தான் அப்படிப்பட்ட வேலைகள் நடக்க அதிக மான பணத்தை ஒதுக்குகிறோம். ஆனால் செங்கற்பட்டு மாவட்டத் திற்கு முன்னுரிமை வழங்குவது தற்பொழுதுள்ள சூழ்நிலையில் கடினம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, கிராமப் பகுதி களில் குடிசைமாற்று வாரியம் செயல்படும் குறிப்பு தற்பொழுது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அடுத்து, பேரூராட்சி மன்றப் பகுதிகளில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகளைக் கட்ட, போளூரில் தனியார் துறையினர் நிலங்களைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, வருவாய்த் துறை நிர்ணயித்தும் கூட அங்கே வேலையை எடுக்க மறுக்கிறார்கள். அந்தத் துறையிலே எப்படி எடுப்பார்கள் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல்வேறு வேலைகள் ஆங்காங்கு எடுக்கப் படுகின்றன. போளூர் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் நல்ல அளவிற்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அந்த அளவில் வேலைகள் நடக்கின்றன. குறைந்த அளவில் 100 வீடுகளையாவது கட்ட முன் வந்தால் தாலுக்கா நகரங்களில் எடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, சென்னையைத் தவிர மற்ற இடங்களுக்கு 40 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கினால் குடிசை மாற்றும் வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, அதிகமான தொகையை ஒதுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவகர்ளே, இந்த ஆண்டு 117.38 லட்சம் ரூபாய்க்கு 1,630 தனிக் குடியிருப்புகளைக் கட்ட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடிசைகளை மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

முன்னாள் ராணுவத்தினர்களுக்குப் புதுவாழ்வு.

* 213 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாஜி ராணுவத்தினர் குடியமைப்பு திட்டத்தின் கீழ் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

Tamil Nadu Forest Plantation Corporation

* 214 Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU B. VENKATASWAMY:

Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(a) Whether the Tamil Nadu Forest Plantation Corporation, Limited, has been formed;

(b) if so, the members of the Board of Directors; and

(c) the functions of the Corporation?